# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 1952/2 - 2016 පෙබරවාරි මස 01 වැනි සඳුදා - 2016.02.01

*1952/2 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

ச. அ. இல. : சி எஸ்ஏ/7/சி ஓஐ/எம்எஸ்/01

**அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் செய்யப்படும் பிரகடனம்**

முத்திரை

மைத்திரிபால சிறிசேன

1. திரு. பிரீத்தி பத்மன் சூரசேன அவர்கள்
   மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி
2. திரு. தேகிரி அமேந்திர மெண்டிஸ் செனவிரத்ன அவர்கள்
   மேல் நீதிமன்ற நீதிபதி
3. திரு. குலதுங்க முதியன்சேலாகே கிஹான் ஹிமான்சு குலதுங்க அவர்கள்
   மேல் நீதிமன்ற நீதிபதி
4. திரு. பஸ்துன்கோரளே ஆரச்சிகே பேமதிலக அவர்கள்
   ஓய்வுபெற்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதி
5. திரு. விக்கும் அத்துல களுஆரச்சி அவர்கள்
   மேல் நீதிமன்ற நீதிபதி

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள் !

விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (393 ஆம் அத்தியாயம்) 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய என்னால் 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதிய அதிகாரப்பத்திரத்தின் மூலம் பாரிய ஊழல்கள், மோசடிகள், அரச வளங்கள், சலுகைகள் மற்றும் அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்தல் என்பன குறித்து புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவொன்று தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்,

அத்துடன் இவ் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள மனுக்களின் தன்மைக்கேற்ப கையளிக்கப்பட்டுள்ள கடமைப் பொறுப்பை உற்பத்திப் பெருக்கம் மிக்கதாக நிறைவேற்றும் பொருட்டு ஆணைக்குழுவிற்கு மேலதிக அதிகாரங்கள் தேவைப்படுத்தப்படுகின்றதென ஆணைக்குழுவினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாதலாலும்,

2008 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் (393 ஆம் அத்தியாயம்) 8 ஆம் பிரிவின் (அ) மற்றும் (ஆ) ஆகிய உட்பிரிவுகளின் கீழ் குறிப்பாகக் காட்டப்பட்டுள்ள அதிகாரங்கள் இவ் ஆணைக்குழுவிற்கு மேலும் என்னால் கையளிக்கப்படுகிறது என்பதை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தங்களின் விவேகம், திறமை, நேர்மை என்பன பற்றி மிகுந்த நம்பிக்கையும், பற்றுறுதியும் கொண்டு மேற்போந்த அதிகாரப்பத்திரத்தின் மூலம் தாபிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின் மேற்காட்டப்பட்டுள்ள பணிகளை செயற்படுத்துவதற்கு தேவைப்படக்கூடிய எல்லா நடவடிக்கைகளையும் எடுக்குமாறு தங்களை இத்தால் பணிக்கின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலாஞ்சனையின் கீழ் இரண்டாயிரத்து பதினாறாம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆம் நாளாகிய இன்று, கொழும்பில் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பீ. பி. அபேகோன்,
சனாதிபதியின் செயலாளர்.

2- 458

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.